# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்

திகதி 2020.11.25


## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 ஒத்தோபர்

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் ஒத்தோபரில் சுருக்கமடைந்தன


**ஒத்தோபரின் ஆரம்ப பகுதியில் நாட்டில் தோன்றிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் பாதகமான தாக்கங்களின் காரணமாக தயாரிப்பு நடவடிக்கைகள் 2020 ஒத்தோபரில் மந்தமான செயலாற்றத்தினை எடுத்துக்காட்டின.** இதற்கமைய, தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணானது குறிப்பாக அணியும் ஆடைகள், உணவு மற்றும் குடிபானத் துறைகளில் உற்பத்தி, புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் கொள்வனவு இருப்பு துணைச் சுட்டெண்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் 2020 ஒத்தோபரில் 40.3 இற்கு வீழ்ச்சியடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 40.3**

2020 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 19.5 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

தொழில்நிலை வீழ்ச்சியுடன் ஒன்றிணைந்து அனைத்துத் தயாரிப்புத் துறைகளினதும் உற்பத்தி ஒத்தோபரில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. உலகளாவிய தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மாதகாலப்பகுதியின் போது இனங்காணப்பட்ட பிரதேசங்களில் விதிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக தமது தொழிற்சாலைத் தொழிற்பாடுகள் பாரியளவில் தடைப்பட்டன என உணவு மற்றும் குடிபானம் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். மேலும், உலகளாவிய நோய்த்தொற்று பற்றிய அச்சத்தின் காரணமாக சில ஊழியர்கள் பணிக்கு வருவதற்கு தயங்கிய அதேவேளை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டல்களைத் தொடர்ந்து தமது முழுமையான தொழிற்படையினையும் ஈடுபடுத்துவதற்கு பல தொழில்தருநர்கள் தவிர்த்தனர் என அவர்கள் குறிப்பிட்டனர். இது, ஊழியர் கிடைக்கும்தன்மையில் குறிப்பிடத்தக்க குறைவினை ஏற்படுத்தியது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| கொ.மு.சு | 59.8 | 40.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 61.7 | 43.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 63.3 | 30.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 51.6 | 25.8 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.9 | 37.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 63.3 | 72.5 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேலும், உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளின் வீழ்ச்சி, அதேபோன்று அதிகரித்த நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கமைவாக கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்ணும் உயர்வான வேகமொன்றில் வீழ்ச்சியடைந்தது. நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண்ணானது உயர்வான வேகத்தில் நீட்சியடைந்த அதேவேளை துறைமுக/ சுங்க அப்புறப்படுத்தலில் கணிசமான தாமதத்தினை தாம் அனுபவித்ததாக பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர்.

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் பற்றிய துணைச் சுட்டெண்ணானது குறிப்பாக மேல்மாகாணத்தில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலின் தற்போது இடம்பெறுகின்ற இரண்டாம் அலையின் காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 செத்தெம்பரிலிருந்து 0.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 ஒத்தோபரில் 53.0 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

2020 ஒத்தோபரில் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு தொடர்ந்தும் உயர்வான வீதத்தில் விரிவடைந்த அதேவேளை ஐரோப்பிய வலயம் மெதுவான வீதத்தில் விரிவடைந்தது. மேலும், கொவிட்-19 இன் மோசமான தாக்கத்தின் தொடர்ச்சியுடன் மாதகாலப்பகுதியில் ரஷ்யாவின் தயாரிப்பு கொ.மு.சு சுருக்கமடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2020 நவெம்பர் 16 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**முதலாம் அலையின் தாக்கத்திலிருந்து கடந்த நான்கு மாதகாலப்பகுதியின் போது படிப்படியாக மீட்சியடைந்த பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது பொருளாதாரத்தின் பணிகள் துறை மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் பாதகமான தாக்கத்தினைப் பிரதிபலித்து 2020 ஒத்தோபரில் 41.8 இற்கு வீழ்ச்சியடைந்தது.** நிலுவையிலுள்ள பணிகள் சுட்டெண் தவிர பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் இச்சுருக்கத்திற்கு துணையளித்திருந்தன.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதித் துணைத் துறைகளில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் வீழ்ச்சியடைந்தன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட பிரதேசங்களில் விதிக்கப்பட்ட ஊரடங்கு மூலம் பிரதானமாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறைகளில் 2020 ஒத்தோபரில் வியாபார நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்தன. மேலும், காப்புறுதி மற்றும் கல்விப்பணிகள் துணைத்துறைகள் சார்பான வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சிகளை எடுத்துக்காட்டியிருந்தன. மேலும், வியாபார நடவடிக்கைகளில் வீழ்ச்சிக்கு கேள்வி மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் எதிர்மறையான தாக்கம் காரணமாக அமைந்தது என பதிலிறுப்பாளர்களில் 59.3 சதவீதமானோர் சுட்டிக்காட்டினர்.

பல்வேறு பதிலிறுப்பாளர்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு முடக்கல் பிரதேசங்களில் வதிகின்ற ஊழியர்கள் சமூகமளிக்காமையின் காரணமாக தமது வியாபார நடவடிக்கைகளுக்கான இடையூறுகள் மூலம் நிலுவையிலுள்ள பணிகள் 2020 ஒத்தோபரில் அதிகரித்தன. இதற்குப்புறம்பாக, உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான சிக்கல்கள் காரணமாக பணிக்கு வருவதற்கான ஊழியர்களின் தயக்கம் மற்றும் தமது முழுமையான தொழிற்படையினையும் ஈடுபடுத்துவதற்கு தொழில்தருநர்கள் விரும்பாமை என்பனவும் மாதகாலப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் சீரான தொழிற்பாட்டினை பாதித்தன.

| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.3** | **41.8** | - | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 58.9 | 40.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| வியாபார நடவடிக்கை | 60.4 | 35.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 43.2 | 58.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 49.5 | 39.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 59.6 | 35.2 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டமைக்கு மத்தியில் ஒப்பந்த ஊழியர்களின் பணி உடன்படிக்கைகள் நீடிக்கப்படாமையின் காரணமாக 2020 ஒத்தோபரில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது.

அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலையினை நாடு அனுபவித்ததன் மூலம் நிலவிய நம்பிக்கையின்மை காரணமாக எதிர்கால தொழில் நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகளும் 2020 ஒத்தோபரில் வீழ்ச்சியடைந்தன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**41.8**

2020 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 12.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 செத்தெம்பரில் 52.0 இலிருந்து 2020 ஒத்தோபரில் 52.9 இற்கு அதிகரித்து தொடர்ச்சியாக நான்காவது மாதமாகவும் உலகளாவிய பணி நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], நவெம்பர் 16, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு = 50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு > 50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு < 50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.